**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4032, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப்பரீட்சை 2024

ஆண்டு: **5** திகதி: 22-06-2024

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. செல்வநாயகி சிவசுப்பிரமணியம்
உதவி: திருமதி உமா ஆதீஸ்வரன்

மாணவர் பெயர்:________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, பின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மயில் ஒரு அழகான பறவை அது தன் நீண்ட தோகையை விரித்து ஆடும் போது பார்க்க அழகாக இருக்கும். இந்தத் தோகை மயிலின் வால் அல்ல. அதன் முதுகில் இருந்து நீண்டு வளரும் சிறகுகளே. ஒவ்வொரு சிறகின் நுனியிலும் கறுப்பு நீலம் பச்சை நிறங்கொண்ட அழகான சிறிய வட்டம் இருக்கும். இதை கண் என்று சொல்வார்கள். மயில் மகிழ்ச்சி அடையும் போது தன் அழகிய தோகையை விசிறி போல் விரித்து ஆடும் என்று கூறப்படுகிறது. ஆண் மயிலுக்குத் தான் தோகை உண்டு. மயிலின் தலையில் கருமையும் நீலப்பச்சையும் கலந்த அழகிய குஞ்சம் உண்டு அதன் தலையும் கழுத்தும் பளபளப்பான நீல நிறமாக இருக்கும். பெண் மயில் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும்.

இந்தியா, இலங்கை, மியன்மார், மலேசியா ஆகிய நாடுகளில் மயில்கள் வாழ்கின்றன. எனினும் இந்தியாவில் தான் இவற்றை அதிகமாகக் காணலாம். அடர்ந்த காடுகளிலும் மலைச்சாரல்களிலும் மயில்கள் சிறு கூட்டமாக வாழும். தானியங்கள், பூச்சிகள், சிறு பல்லிகள், பாம்புகள் ஆகியவற்றை மயில் உணவாகக் கொள்ளும். உயர்ந்த மரக்கிளைகளில் தங்கி இரவைக் கழிக்கும். இவைக்கு கூர்மையான பார்வை உண்டு. பகைவர்கள் வருவதை தூரத்தில் பார்த்து ஒளிந்து கொள்ளும். இதனால் மிக உயரமாக பறக்க முடியாது. வேகமாக ஓடும். மயிலின் தோகைக்காக பலர் இதனை வேட்டையாடுகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும்

1 எப்போது மயில் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்?

—————————————————

2.ஒவ்வொரு சிறகின் நுனியிலும் காணப்படும் நிறங்கள் எவை?

—————————————————

2.மயில்கள் வாழும் நாடுகள் மூன்று தருக?

—————————————————

4.மயில்கள் எங்கு வசிக்கின்றன?

____________________

5.ஏன் மயிலைப் பலர் வேட்டையாடுகிறார்கள் ?

____________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **2** | **புள்ளிகள்** | **10** | **பக்கம்** | **3** |

**(1).** "யாமறிந்த புலவரிலே கம்பரைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை" **என்ற பாடல் வரிகளில் வரும் மூன்று புலவர்களையும், அவர்கள் எழுதிய நூல்களையும் அட்டவணைப்படுத்துக.**

| புலவர் | நூல் |
|---|---|
| | |
| | |
| | |

(2) இவர்களை எப்படி அழைப்போம்?

1 சிலை வடிப்பவர் __________________


2 ஓவியம் வரைபவர் __________________

3 நாடகங்களில் நடிப்பவர் __________________

4 கப்பல் ஓட்டுபவர் __________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **3** | **புள்ளிகள்** | **15** | **பக்கம்** | **4** |

**(1) பொருத்தமான சொல்லைக் கொண்டு நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| நான் |  | குடிக்கிறேன் |
| நீ | | |
| அவன் | | |
| அது | | |
| நாங்கள் | | |
| நீங்கள் | | |
| அவர்கள் | | |
| அவை | | |

(8 புள்ளிகள்)

(2) **எதிர்ச்சொல் தருக**

1 கீழே ___________

2 சுத்தம் ___________

3 மரியாதை ___________

4 மாதா ___________

5 மறதி ___________

5 துக்கம் ___________

7 தொடக்கம் ___________

(7 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

மேலே தரப்பட்ட சொற்களில் பொருத்தமான சொல்லை கொண்டு வினாக்களை நிறைவு செய்யுங்கள்.


| யார்? | எது? | எவை ? |
|---|---|---|

1. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியது _________?
2. உலகில் உயரமான மலை __________?
3. இந்த மலை உச்சிக்குப் போக ________ சிறந்த பாதை?
4. _________ சிறந்த ஓவியர்?
5. முக்கனிகளும் ________?
6. வீதிகளில் நடக்கும் போது நாம் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுங்குகள்

   ________ ?
7. எங்கள் பாடசாலையின் புதிய அதிபர் _________?
8. பொது மக்களின் போக்குவரத்துச் சாதனங்கள் _________?
9. கனடாவில் விவசாயம் செய்ய _________ சிறந்த காலம்?
10. தெரியாத கணக்கைச் செய்யத் தம்பிக்கு _________ உதவியது?
11. தமிழர்களின் தாயகங்கள் _________?
12. திருக்குறளை எழுதியவர் _________?
13. தமிழர்களின் தாய்மொழி _________?
14. முத்தமிழும் _________?
15. உயிர் வாழ்வதற்குத் தேவையானவை _________?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |

**கீழே தரப்பட்ட குறிப்புகளைக் கொண்டு வாக்கியத்தை நிறைவு செய்து எழுதுங்கள்.**

| | | |
|---|---|---|
| வீடு |  | கற்களால் |
| மகிழ்ச்சியாக | | சுத்தமாக |
| இரண்டுமாடி | | அழகான |
| நான்கு அறைகள் | | மேல்மாடியில் |
| பெரிதாக | | கூடமும் |

1 இது நான் வசிக்கும் ________________________________________ .

2 என் வீடு ________________________________________ வீடாகும்.

3 என் வீட்டில் ____________________________________ உள்ளன.

4 என் வீட்டை ___________________________________ வைத்திருப்பேன்.

5 என் வீடு ________________________________________ கட்டப்பட்டது.

6 இது ஓர் __________________________________________ வீடாகும்.

7 என் வீடு பார்ப்பதற்கு ________________________________ இருக்கும்.

8 என் வீட்டில் நான் __________________________________ வசிக்கிறேன்.

9 என் வீட்டில் என் அறை _________________________ __________உள்ளது

10 எமது சமையல் அறையும் _______________________ கீழ்த்தளத்தில் உள்ளன.


| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 15 வசனங்களுக்குக் குறையாத கட்டுரை எழுதுக. (குறிப்புகள் தரப்பட்டுள்ளன)**

**1.அம்மா**

| | | | |
|---|---|---|---|
| இனிமை | பெயர் | வேலை | சுத்தம் |
| அழகான |  | | சுவையாக |
| அன்பானவர் | | | பிடித்தது |
| பாடம் சொல்லி | உடை | பொட்டு | கண்டிப்பானவர் |

**2 விளையாட்டுகள்**

| | | |
|---|---|---|
| பெறும் நன்மைகள் |  | தெரிந்த விளையாட்டுகள் |
| மகிழ்ச்சி | | உடல் உறுதி |
| மன அமைதி | | பயன்கள் |
| விருப்பமான விளையாட்டு | | விளையாட்டுப் போட்டிகள் |

**மேலே உள்ள குறிப்புகளின் துணையுடன் கட்டுரை எழுதுக.**

**(3)** தமிழ் வளர்த்த பெரியார் ஒருவரைப் பற்றி எழுதுக.

பாரதியார், விபுலானந்த அடிகள், கம்பர், வள்ளுவர்